தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.06.2013 A.M**

---

## சம்பங்கி சாகுபடி முறைகள்



விவசாயிகளுக்கு அதிக லாபம் ஈட்டித்தரும் சம்பங்கி மலர் சாகுபடி முறைகள் குறித்து சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பூக்கடைக்கு விளம்பரம் தேவையா என்பார்கள். அதன் வாசனையே முகவரியை முத்தாய்ப்பாய்த் தெரிவிக்கும் என்பது அதன் பொருள். ஆனால், வாழ்வே வணிகமயமாகிவிட்ட இன்றைய சூழலில் மலர்களுக்கும் விளம்பரம் தேவைப்படுகிறது. விளம்பரங்களுக்கும் மலர்கள் தேவைப்படுகின்றன. பல்வேறு அலங்காரங்கள், மாலைகள், பூங்கொத்துகளில் பயன்பட்டு, நல்ல லாபமும் தரும் பாலியாந்தீஸ் டியூப்ரோஸா என்ற தாவரவியல் பெயர் கொண்ட சம்பங்கி மலர் சாகுபடி முறைகளை விவசாயிகள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

சம்பங்கி மலர் சாகுபடிக்கு ஏற்ற காலம் ஜூன், ஜூலை மாதங்கள் ஆகும். மெக்சிகன் சிங்கிள், சிருங்கார், பிரஜ்வால், பியர்ள் டபுள், சுவாசினி, வைபவ் ஆகிய ரகங்கள்

சாகுபடிக்கு ஏற்றவை. மேலும், நல்ல வடிகால் வசதியுள்ள வண்டல் மண், 6.5 முதல் 7.5 வரை உள்ள கார அமிலத்தன்மை ஏற்றது.

25 முதல் 30 கிராம் எடையுள்ள கிழங்குகள் நடவுக்கு ஏற்றவை. ஏக்கருக்கு 44,800 கிழங்குகள் தேவைப்படும். 45 செ.மீ. இடைவெளியில் பார் பிடித்து, பாரின் சரிவுகளில் 20 செ.மீ. இடைவெளிகளில் இரண்டரை செ.மீ. ஆழத்தில் ஊன்ற வேண்டும். ஜூன், ஜூலை மாதங்களில் கிழங்கு ஊன்றுதல் நல்லது. கிழங்கு எடுத்து 30 நாள் கழித்து ஊன்ற வேண்டும்.

ஏக்கருக்கு 10 டன் தொழு உரம், ஏக்கருக்கு 20 கி.கி. தழைச்சத்து தரவல்ல 44 கிலோ யூரியா, 80 கி.கி. மணிச்சத்து தரவல்ல 500 கிலோ சூப்பர் பாஸ்பேட், 80 கி.கி. சாம்பல் சத்து தரவல்ல 135 கிலோ முரேட் ஆப் பொட்டாஷ் ஆகிய ரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும்.

இரண்டு மாதங்கள் கழித்து ஒரு முறையும், பின் மூன்று மாதங்கள் கழித்து ஒரு முறையும், மீண்டும் மூன்று மாதங்கள் கழித்து ஒரு முறையும் என மூன்று முறை 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: நூற்புழு தாக்குதல் சம்பங்கியில் பிரச்னை தரும் ஒன்று. பகுப்பாய்வு மூலம் நூற்புழு தாக்குதலை உறுதி செய்துகொண்டு, அதனைக் கட்டுப்படுத்த செடிக்கு ஒரு கிராம் வீதம் கார்போ பியூரான் குருணை மருந்தை வேர்மண்டலத்திற்கு அருகில் வைத்து நீர் பாய்ச்சவும்.

இது இரண்டாண்டுப் பயிர். நல்ல முறையில் பராமரிப்பதன் மூலம் மேலும் ஓராண்டு பலன் தரும். தினசரி மலர் பறிக்க வேண்டும். ஏக்கருக்கு ஆண்டுக்கு 6 டன் வரை மகசூல் எடுக்கலாம்.

எனவே, சம்பங்கி சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், இந்த முறையான சாகுபடி முறைகளை மேற்கொண்டு நிறைவான மகசூலும், இலாபமும் பெற்றுப் பயனடைய வேண்டும் என்றார் அவர்.

## மானாவாரி நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சராசரியாக ஆண்டுதோறும் 13,300 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு, சுமார் 23,275 டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதில், வைகாசிப் பட்டத்திலும் மற்றும் இறவைப் பயிராகக் கார்த்திகைப் பட்டத்திலும் பயிரிடப்படுகிறது.

நிலக்கடலை சாகுபடியில் மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து கிருஷ்ணகிரி டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மைய ஒருங்கிணைப்பாளர் டாக்டர் டி.சுந்தர் ராஜ் கூறியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலக்கடலை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திண்டிவனம் ஆராய்ச்சி மையத்திலிருந்து வெளியிடப்பட்ட டிஎம்வி 7, விருத்தாசலம் ஆராய்ச்சி மையத்திலிருந்து வெளியிடப்பட்ட விஆர்ஐ 2 மற்றும் விஆர்ஐ 5, கோவையிலிருந்து வெளியிடப்பட்ட கோ 4 ஆகிய 100 முதல் 110 நாள்கள் வரை வயதுடைய கொத்து ரகங்களையும், கோ.6, விஆர்ஐ 7 ஆகிய 125 முதல் 130 நாள்கள் வரை வயதுடைய கோ.டி கொத்து ரகங்களையும் மானாவாரியில் சாகுபடி செய்யலாம். இந்த ரகங்கள் வறட்சியைத் தாங்கி வளர்வதோடு மட்டுமன்றி, நோய் எதிர்ப்புத் திறனையும் கொண்டுள்ளன.

விதை விதைப்பு: விதைப்பதற்கு சான்று பெற்ற சுமார் 90 சதம் முளைப்புத் திறன் உள்ள விதைகளையே பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 50 கிலோ விதைப் பொருள்கள் தேவைப்படும். விதைகளை சுமார் 5 செ.மீ ஆழத்திலும், வரிசைக்கு வரிசை 30 செ.மீ, செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியிலும் விதைக்கலாம்.

இயற்கை முறை விதை நேர்த்தி: மண் வழியாகப் பரவும் நோய்களான வேரழுகல், தண்டழுகல் நோய்களால் இளஞ்செடிகள் பாதிக்கப்பட்டு, பயிர் எண்ணிக்கை குறைந்து விளைச்சல் பாதிக்கப்படுகிறது. உயிர் நோய்க் கொல்லிகளான டிரைக்கோடெர்மா விரிடி ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்வதன் மூலம் மண் வழியாகப் பரவும் நோய்களைத் தடுக்கலாம்.

உர மேலாண்மை: விதைப்பதற்கு 10 முதல் 15 நாள்கள் முன்னதாக ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட வேண்டும். மண்ணை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் உரமிடுவதே சிறந்தது.

பின்னர் மண் அமைப்பதன் மூலம் பயிரின் காய்ப் பிடிக்கும் திறனை அதிகரித்து நல்ல திரட்சியான பருப்பைப் பெற வழி வகுக்கிறது.

நுண்ணூட்டக் கலவை தெளித்தல்: பொதுவாக போரான், துத்தநாகம், இரும்பு, கந்தகச் சத்து போன்ற நுண்ணூட்டச் சத்தின் குறைபாடு காரணமாக பயிரின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

களை நிர்வாகம்: நிலக் கடலை விதைப்பு செய்த உடன் நிலத்தில் நல்ல ஈரம் இருக்கும் நிலையில், புளுக்குளோரலின் என்ற களைக் கொல்லியை ஏக்கருக்கு 800 மி.லி என்ற அளவில் 200 லிட்டர் நீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளித்தால், பயிரின் இளம் பருவத்தில் தோன்றும் களைகளைக் கட்டுப்படுத்தலாம்.

இந்தத் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் மானாவாரி நிலத்தில் ஏக்கருக்கு சுமார் 1250 கிலோ வரை விளைச்சல் கிடைக்கும்.தொடர்புக்கு: 04343-296039.

## தட்ப-வெப்பம் அறிந்து பயிரிடுவோம்!







தட்ப-வெப்ப காலநிலைகளுக்கு ஏற்ற பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் அதிக மகசூலை பெற முடியும்.

இதுகுறித்து கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் து.ஜவஹர் மற்றும் நிலைய பேராசிரியை உமாமகேஸ்வரி ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வடகிழக்குப் பருவமழையும், மானாவாரி சாகுபடியும்: அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான பருவம் வடகிழக்குப் பருவமழை பருவம் என அழைக்கப்படுகிறது. தக்காண பீடபூமியின் தென்பகுதியில் இது மிக முக்கியமான மழைப் பருவமாகும். கடலோர ஆந்திர மாவட்டப் பகுதிகள், ராயலசீமா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகள் வடகிழக்குப் பருவமழை பருவத்தில் அதிக மழை பெறுகின்றன.

தமிழகத்தின் மொத்த ஆண்டு மழையளவில் 48 சதவீதம் வடகிழக்குப் பருவமழை பருவத்தில் பெறப்படுகிறது. தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களின் ஆண்டு மழையளவில் 60 சதவீதமும், உள்மாவட்டங்களின் மழையளவில் 40 முதல் 50 சதவீதமும் இப் பருவத்தில் பெறப்படுகின்றன.

பருவமழைக்கு முன்பாகவே நிலம் தயாரித்தல் போன்ற சாகுபடி செயல்களை ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலம் வேலையாள்கள் பற்றாக்குறை போன்ற சில இடையூறுகளைத் தவிர்க்கலாம். காலதாமதம் ஏற்பட்டால் பயிரின் பிந்தைய வளர்ச்சி பருவம் வறட்சியால் பாதிக்கப்படும் சூழ்நிலை

ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

பருத்தி: உகந்த வானிலை காரணிகள்- முளைத்தலுக்கு உகந்த குறைந்தபட்சம் வெப்ப நிலை 16 டிகிரி செல்சியஸ். வளர்ச்சிக்கு உகந்த குறைந்தபட்ச வெப்பநிலை 21-27 டிகிரி செல்சியஸ். தாங்கி வளரும் வெப்ப நிலையின் உச்ச அளவு 43 டிகிரி செல்சியஸ். காய் பிடித்தலுக்கு உகந்த பகல் நேர வெப்ப நிலை 27-32 டிகிரி செல்சியஸ். ஆண்டு மழையளவு 50 செ.மீ., பருவம்- முன்பருவம். விதைக்கும் காலம் - செப்டம்பர் இறுதி வாரம். அறுவடை செய்யும் காலம்- பிப்ரவரி 2-வது வாரம்.

சோளம்: உகந்த வானிலை காரணிகள்- வளர்ச்சிக்கு உகந்த வெப்பநிலை 26-30 டிகிரி செல்சியஸ், அதிக வெப்பநிலையையும், வறட்சியையும் தாங்கக் கூடியது. பருவம்- முன்பருவம், விதைக்கும் காலம்- செப்டம்பர் இறுதி வாரம். அறுவடை செய்யும் காலம்- டிசம்பர் இறுதி வாரம்.

மக்காச்சோளம்: உகந்த வானிலை காரணிகள்-வளர்ச்சிக்கு உகந்த வெப்பநிலை 32 டிகிரி செல்சியஸ். 50-75 செ.மீ. சீரான பரவலுடன் கூடிய மழை.

கம்பு: உகந்த வானிலை காரணிகள்-வளர்ச்சிக்கு உகந்த வெப்பநிலை 20-28 டிகிரி செல்சியஸ். பருவம்-பருவ விதைப்பு, விதைக்கும் காலம்- அக்டோபர் 2-ம் வாரம். அறுவடை செய்யும் காலம்- டிசம்பர் கடைசி வாரம்.

பாசிப்பயறு: உகந்த வானிலை காரணிகள்-மழை 60-75 செ.மீ., கடல் மட்டம் முதல் 2 ஆயிரம் மீட்டர் உயரம் வரை பயிரிட உகந்தது. மிக அதிகளவு வறட்சியைத் தாங்கக் கூடியது.

உளுந்து: உகந்த வானிலை காரணிகள்-வெப்பநிலையும், ஈரப்பதமும் கொண்ட பருவம் உகந்தது. கடல் மட்டம் முதல் 1800 மீட்டர் உயரம் வரை பயிரிட உகந்தது. பூக்கும் பருவத்தில் அதிக மழை பாதிப்பை உண்டாக்கும்.

சூரியகாந்தி: உகந்த வானிலை காரணிகள்-பூக்கும் பருவம் முதல் முதிர்ச்சியடையும் பருவம் வரை பிரகாசமான சூரிய வெளிச்சம் தேவை. பூக்கும் பருவத்தில் கனமழை மகரந்தச் சேர்க்கையை பாதிக்கும். பருவம்-பின்பருவ விதைப்பு, விதைக்கும் காலம்- அக்டோபர் 3-ம் வாரம், அறுவடை செய்யும் காலம் - ஜனவரி முதல் வாரம்.

கொண்டைக்கடலை: உகந்த வானிலை காரணிகள்-குளிர்கால பயிர். ஆனால், மிக அதிக குளிரும், உறை பனியும் பயிரை பாதிக்கும். மழை 60-90 செ.மீ.

கொத்தமல்லி: உகந்த வானிலை காரணிகள்-இலைக்காக சாகுபடி செய்யும்போது கோடைக் காலத்தை தவிர மற்ற அனைத்துப் பருவங்களிலும் சாகுபடி செய்யலாம். உறைபனியற்ற வறண்ட குளிர்காலம் உகந்தது. கொத்தமல்லி (1) இலைகள்: பருவம்-பின்பருவ விதைப்பு. விதைக்கும் காலம்-அக்டோபர் 3-ம் வாரம். அறுவடை செய்யும் காலம் - டிசம்பர் 3-வது வாரம்.

கொத்தமல்லி (2) விதை: பருவம்-பின்பருவ விதைப்பு. விதைக்கும் காலம்-அக்டோபர் 3-ம் வாரம். அறுவடை செய்யும் நேரம் - ஜனவரி கடைசி வாரம்.

சென்னா: உகந்த வானிலை காரணிகள்-உகந்த மண்ணின் கார அமில நிலை 7 - 8.5. நீர் தேங்கியிருத்தல், கனமழை மற்றும் குறைந்த வெப்பநிலை ஆகியவற்றால் பாதிக்கப்படும். சென்னா (1) இலைகள்: பருவம்-மிகவும் பின்தங்கிய விதைப்பு.விதைக்கும் காலம்-நவம்பர் முதல் வாரம். அறுவடை செய்யும் காலம் - ஜனவரி 2-வது வாரம்.

சென்னா (2) விதை: பருவம்- மிகவும் பின்தங்கிய விதைப்பு. விதைக்கும் காலம்-நவம்பர் முதல் வாரம். அறுவடை செய்யும் காலம்- ஏப்ரல் 2-வது வாரம்.

பருத்தி, சோளம், பயறு வகைகள் போன்ற பயிர்களை முன் பருவ விதைப்பு செய்யலாம். பிற பயிர்களான மக்காச்சோளம், கம்பு மற்றும் குறுதானியங்களை அக்டோபர் 2-வது மற்றும் 3-வது வாரங்களில் பருவ விதைப்பு செய்யலாம்.

அக்டோபர் 3-வது வாரத்திற்கு பின்பு மழை காலதாமதமாக தொடங்கினால், பின்பருவத்திற்கு உகந்த பயிர்களான சூரியகாந்தி, எள், கொத்தமல்லி மற்றும் சென்னா போன்ற பயிர்களை விதைப்பு செய்யலாம் என்று செய்திக்குறிப்பில் குறிப்பிடப்

பட்டுள்ளது.

சம்பங்கி சாகுபடி முறைகள்

திருநெல்வேலி: விவசாயிகளுக்கு அதிக லாபம் ஈட்டித்தரும் சம்பங்கி மலர் சாகுபடி முறைகள் குறித்து சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பூக்கடைக்கு விளம்பரம் தேவையா என்பார்கள். அதன் வாசனையே முகவரியை முத்தாய்ப்பாய்த் தெரிவிக்கும் என்பது அதன் பொருள். ஆனால், வாழ்வே வணிகமயமாகிவிட்ட இன்றைய சூழலில் மலர்களுக்கும் விளம்பரம் தேவைப்படுகிறது. விளம்பரங்களுக்கும் மலர்கள் தேவைப்படுகின்றன. பல்வேறு அலங்காரங்கள், மாலைகள், பூங்கொத்துகளில் பயன்பட்டு, நல்ல லாபமும் தரும் பாலியாந்தீஸ் டியூப்ரோஸô என்ற தாவரவியல் பெயர் கொண்ட சம்பங்கி மலர் சாகுபடி முறைகளை விவசாயிகள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

சம்பங்கி மலர் சாகுபடிக்கு ஏற்ற காலம் ஜூன், ஜூலை மாதங்கள் ஆகும். மெக்சிகன் சிங்கிள், சிருங்கார், பிரஜ்வால், பியர்ள் டபுள், சுவாசினி, வைபவ் ஆகிய ரகங்கள் சாகுபடிக்கு ஏற்றவை. மேலும், நல்ல வடிகால் வசதியுள்ள வண்டல் மண், 6.5 முதல் 7.5 வரை உள்ள கார அமிலத்தன்மை ஏற்றது.

25 முதல் 30 கிராம் எடையுள்ள கிழங்குகள் நடவுக்கு ஏற்றவை. ஏக்கருக்கு 44,800 கிழங்குகள் தேவைப்படும். 45 செ.மீ. இடைவெளியில் பார் பிடித்து, பாரின் சரிவுகளில் 20 செ.மீ. இடைவெளிகளில் இரண்டரை செ.மீ. ஆழத்தில் ஊன்ற வேண்டும். ஜூன், ஜூலை மாதங்களில் கிழங்கு ஊன்றுதல் நல்லது. கிழங்கு எடுத்து 30 நாள் கழித்து ஊன்ற வேண்டும்.

ஏக்கருக்கு 10 டன் தொழு உரம், ஏக்கருக்கு 20 கி.கி. தழைச்சத்து தரவல்ல 44 கிலோ யூரியா, 80 கி.கி. மணிச்சத்து தரவல்ல 500 கிலோ சூப்பர் பாஸ்பேட், 80 கி.கி. சாம்பல் சத்து தரவல்ல 135 கிலோ முரேட் ஆப் பொட்டாஷ் ஆகிய ரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும்.

இரண்டு மாதங்கள் கழித்து ஒரு முறையும், பின் மூன்று மாதங்கள் கழித்து ஒரு முறையும், மீண்டும் மூன்று மாதங்கள் கழித்து ஒரு முறையும் என மூன்று முறை 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: நூற்புழு தாக்குதல் சம்பங்கியில் பிரச்னை தரும் ஒன்று. பகுப்பாய்வு மூலம் நூற்புழு தாக்குதலை உறுதி செய்துகொண்டு, அதனைக் கட்டுப்படுத்த செடிக்கு ஒரு கிராம் வீதம் கார்போ பியூரான் குருணை மருந்தை வேர்மண்டலத்திற்கு அருகில் வைத்து நீர் பாய்ச்சவும்.

இது இரண்டாண்டுப் பயிர். நல்ல முறையில் பராமரிப்பதன் மூலம் மேலும் ஓராண்டு பலன் தரும். தினசரி மலர் பறிக்க வேண்டும். ஏக்கருக்கு ஆண்டுக்கு 6 டன் வரை மகசூல் எடுக்கலாம்.

எனவே, சம்பங்கி சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், இந்த முறையான சாகுபடி முறைகளை மேற்கொண்டு நிறைவான மகசூலும், இலாபமும் பெற்றுப் பயனடைய வேண்டும் என்றார் அவர்.

## தமிழகத்தில் இன்றும் மழை வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து ஆந்திரம், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள இடங்களில் மழை பெய்து வருகிறது.

மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும், வெப்பச் சலனம் காரணமாக மழை பெய்கிறது. செவ்வாய்க்கிழமை மாலை மற்றும் புதன்கிழமை காலையில் குளச்சல், வால்பாறை, சின்னக் கல்லாறு, நீலகிரி, அரக்கோணம், திருநெல்வேலி, நாகர்கோவில் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்துள்ளது.

அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் 50 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இரு வாரங்களாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் மாநிலத்தின் முக்கிய அணைகள் மற்றும் ஏரிகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: வெப்பச் சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வியாழக்கிழமை மழை பெய்யக் கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும், நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.


## குமரி மாவட்டத்தில் தொடர் மழை: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இம்மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை விட்டுவிட்டு பெய்து வருகிறது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 17.30 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 31.25 அடியாகவும் உள்ளது. பேச்சிப்பாறை அணையில் 15 மி.மீ. மழையும், பெருஞ்சாணி அணையில் 29 மி.மீ. மழையும் பெய்துள்ளது. பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 236 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணிக்கு 247 கனஅடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது.

மாவட்டத்தில் அதிகபட்சமாக குளச்சலில் 48 மி.மீ. மழை பெய்துள்ளது. நாகர்கோவிலில் 19.6 மி.மீ., பூதப்பாண்டி 17.8 மி.மீ., கன்னிமார் 9.3 மி.மீ., பாலமோர் 23.3 மி.மீ., மயிலாடி 15.8 மி.மீ., கொட்டாரம் 22.6 மி.மீ., இரணியல் 9.4 மி.மீ., புத்தன்அணையில் 28.4 மி.மீ., திற்பரப்பு 32 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

## குறுவைக்கு தண்ணீர் திறக்கப்படாததால் டெல்டா விவசாயிகள் கவலை



மேட்டூர் அணையிலிருந்து குறுவை நெல் சாகுபடிக்கு புதன்கிழமை தண்ணீர் திறந்துவிடப்படாததால், காவிரி டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மேட்டூர் அணையிலிருந்து ஆண்டுதோறும் குறுவை நெல் சாகுபடிக்கு ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படும். இதன்மூலம், திருச்சி, தஞ்சை, திருவாரூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் சுமார் 1.20 லட்சம் ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி தொடங்கும்.

குறுவை நெல் சாகுபடிக்கு 110 முதல் 120 நாள்களுக்கு மொத்தம் 140 டிஎம்சி தண்ணீர் தேவைப்படும். ஆனால், மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால், நிகழாண்டு பாசனத் தேவைக்காக வழக்கமான நாளான ஜூன் 12-இல் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை.

புதன்கிழமை (ஜூன் 12) நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 17.82 அடியாகவும், நீர் இருப்பு 3.49 டிஎம்சியாகவும் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 60 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஜூன் 12-இல் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 79 அடியாக இருந்தபோதிலும், அணைக்கு போதிய நீர்வரத்து இல்லாததால் குறுவை நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. பின்னர், காலதாமதமாக செப்டம்பர் 17-ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

நிகழாண்டு அணையின் நீர்மட்டம் மிகவும் குறைவாக இருப்பதால், இந்த ஆண்டு குறுவை நெல் சாகுபடி முற்றிலும் பாதிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

மின் உற்பத்தி பாதிப்பு: மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்போது, அணையின் ஐந்து கதவணைகள் மூலம் 150 மெகா வாட் மின்சாரமும், சுரங்க மின் நிலையம் மூலம் 200 மெகா வாட் மின்சாரமும், அணை மின் நிலையம் மூலம் 50 மெகா வாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படும்.

இந்த நிலையில், புதன்கிழமை பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படாததால், நீர் மின் நிலையங்களில் 400 மெகா வாட் வரை மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

## தமிழகத்தில் இன்றும் மழை வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் வியாழக்கிழமையன்று (ஜூன் 13) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து ஆந்திரம், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள இடங்களில் மழை பெய்து வருகிறது.

மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும், வெப்பச் சலனம் காரணமாக மழை பெய்கிறது. செவ்வாய்க்கிழமை மாலை மற்றும் புதன்கிழமை காலையில் குளச்சல், வால்பாறை, சின்னக் கல்லாறு, நீலகிரி, அரக்கோணம், திருநெல்வேலி, நாகர்கோவில் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்துள்ளது.

அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் 50 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இரு வாரங்களாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் மாநிலத்தின் முக்கிய அணைகள் மற்றும் ஏரிகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: வெப்பச் சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வியாழக்கிழமை மழை பெய்யக் கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும், நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

## மதிப்புக் கூட்டப்பட்ட தானியப் பொருள் தயாரிக்கும் பயிற்சி 24-இல் துவக்கம்

சிறு தானியங்களைக் கொண்டு மதிப்புக் கூட்டப்பட்ட தானியப் பொருள்களைத் தயாரிக்கும் பயிற்சி வரும் 24-ஆம் தேதி முதல் துவங்குகிறது.

÷இதுதொடர்பாக மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி நிலையத்தின் (எம்.எஸ்.எம்.இ.) கோவை கிளை உதவி இயக்குநர் பி.கயல்விழி, புதன்கிழமை விடுத்த செய்தி:

அரிசியை விட சிறுதானியங்கள் மக்களின் ஆரோக்கியத்தை சமச்சீராகப் பாதுகாக்கும்.

இவற்றைக் கொண்டு மதிப்புக் கூட்டப்பட்ட தானியப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி வரும் 24-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இப்பயிற்சி குறித்த இலவச அறிமுக வகுப்பு வரும் வெள்ளிக்கிழமை (ஜூன் 14) காலையில் எம்.எஸ்.எம்.இ. மையத்தில் நடைபெற உள்ளது.

தானியத்தின் முக்கியத்துவம், இயந்திரங்களைக் கொண்டு வியாபார ரீதியில் தயாரிக்கும் பல்வேறு தானியப் பொருள்களின் செயல் விளக்கம், அரசின் உணவுப் பாதுகாப்புச் சட்டங்கள், தொழில் அங்கீகாரம் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசின் திட்டங்கள், சிறுதொழில் அமைக்கும் திட்ட விளக்கம் மற்றும் வங்கிகளில் கடனுதவி பெறுவதற்கான வழிமுறைகள், உணவுத் தொழிலுக்கான வியாபார உத்திகள் ஆகியவை தொழில்நுட்ப அனுபவம் உள்ளவர்களால் பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சி முடித்தவர்களுக்கு மத்திய அரசின் சான்றிதழ் வழங்கப்படும். உணவுத் தொழில் துவங்க விருப்பமுள்ள, 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற, 18 வயதுக்கு மேல் உள்ள அனைவரும் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்:

உதவி இயக்குநர், எம்.எஸ்.எம்.இ. வளர்ச்சி நிலையம், 386, பட்டேல் சாலை, ராம் நகர், கோவை - 9. தொலைபேசி 2233956, 2230426.

இன்றைய வேளாண் செய்திகள்

13.06.2013 A.M

---

## கரும்பு அரவை பணம் ரூ.84 கோடி பாக்கி: ஆலையை நடத்த விவசாயிகள் கோரிக்கை

தஞ்சாவூர்: "தஞ்சையில், விவசாயிகளுக்கு அரைத்த கரும்புக்கு 84 கோடி ரூபாய் தொகையை பட்டுவாடா செய்யாமல் பாக்கி வைத்துள்ள இரண்டு தனியார் ஆலைகளை அரசு ஏற்று நடத்த வேண்டும்' என, தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக அரசின் தலைமை செயலர் ஷீலா பாலகிருஷ்ணன், வேளாண்மைத்துறை முதன்மை செயலர் சந்தீப் ஸக்சேனா, சர்க்கரைத்துறை இயக்குனர் மகேசன் காசிராஜன் ஆகியோருக்கு, தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலாளர் விமல்நாதன், துணைத்தலைவர் சின்னத்துரை ஆகியோர் கோரிக்கை மனு ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இம்மனுவில் கூறியிருப்பதாவது:

தஞ்சை மாவட்டத்திலுள்ள திருஆரூரான் சர்க்கரை ஆலை மற்றும் ஸ்ரீ அம்பிகா சர்க்கரை ஆலை ஆகியவை கரும்பு அரவை பருவத்தை கடந்த ஒரு மாதத்துக்கு முன்பே, முடித்து விட்டன. ஆனாலும், விவசாயிகளுக்கு கடந்த ஃபிப்., மாதம் 10ம் தேதி பணம் பட்டுவாடா செய்யாமல், பாக்கி தொகை 84 கோடி ரூபாயை 120 நாட்களுக்கு மேல் வைத்துள்ளன.

மத்திய அரசின் கரும்பு கட்டுப்பாட்டு உத்தரவுப்படி, கரும்பு அரைத்த நாளிலிருந்து 14 நாட்கள் கடந்து விட்டால், 15 சதவீதம் வட்டித்தொகையுடன் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும் என்பது விதிமுறை ஆகும். இதையும், மேற்கண்ட தனியார் ஆலைகள் பின்பற்றவில்லை.

இதுகுறித்து, தஞ்சை கலெக்டர் தலைமையில், கடந்த மார்ச், ஏப்ரல், மே மாதங்களில்

நடந்த விவசாயிகள் குறைதீர்க்கூட்டங்களில் புகார் செய்து, கருப்பு பேட்ஜ் அணிந்து வெளிநடப்பு, ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில், ஆலை அதிகாரிகள் பொய்யான வாக்குறுதி அளித்தனர்.

குறித்த காலத்தில் கரும்பு அரவை பணம் பாக்கி தொகையை ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்யாததால், வங்கிகளில் வாங்கிய பயிர் கடன்களை விவசாயிகள் திருப்பி செலுத்த முடியவில்லை.

அதனால், 2013-14ம் பருவத்துக்கு வேளாண் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், விவசாயிகளுக்கு கரும்புக்கு புதிய கடன் தர மறுத்து வருகின்றன. தேவையற்ற வட்டி சுமையில் விவசாயிகள் தவிக்க நேரிட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு ஆலைகளும் சர்க்கரை உற்பத்தி மட்டுமின்றி, எரிசாராய ஆலை, இணை மின் உற்பத்தி, கரும்பு சக்கை உரம், காகித உற்பத்தி ஆகியவற்றில் பல கோடி ரூபாய் லாபம் ஈட்டிய நிலையிலும் விவசாயிகளுக்கு உரிய பணத்தை தர மறுத்து, தாமதம் செய்து வருகிறது.

எனவே, தமிழகத்தில், சமீபத்தில் அண்ணாமலை பல்கலையை அரசு ஏற்று நடத்தியது போல, விவசாயிகளின் நலனைக் கவனத்தில் கொண்டு, மேற்கண்ட இரு தனியார் ஆலைகளையும் அரசு ஏற்று நடத்தவும், தாமதமான பணப்பட்டுவாடாவுக்கு 15 சதவீதம் வட்டியை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலை நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க தயங்கும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலாளர் விமல்நாதன் கூறியதாவது:

தஞ்சையில் இரு தனியார் ஆலைகள், விவசாயிகளுக்கு அரைத்த கரும்புக்கு 94 கோடி ரூபாய் நிலுவை வைத்துள்ளது. இதுகுறித்து, வேளாண்மைத்துறை முதன்மை செயலர் சந்தீப் ஸக்சேனாவை, கடந்த 10ம் தேதி, சென்னை அலுவலகத்தில் நேரில் சந்தித்து முறையிட்டோம்.

அப்போது, எங்களுடன், இந்திய விவசாயிகள் கூட்டமைப்பு கரும்பு பிரிவு செயலாளர்

கோதண்டராமன், பென்னாடம் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயி சோமசுந்தரம் ஆகியோரும் முறையிட்டனர்.

இதையடுத்து, கரும்பு அரைவை பாக்கி தொகையை விவசாயிகளுக்கு உடனே பட்டுவாடா செய்ய, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சர்க்கரைத்துறை இயக்குனர் மகேசன் காசிராஜனுக்கு, செயலர் சந்தீப் ஸக்சேனா உத்தரவிட்டுள்ளார். இதை தொடர்ந்து, விரைவான நடவடிக்கையை விவசாயிகள் எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## மழை பெய்யாவிட்டால் திண்டுக்கல் குடிநீருக்கு சிக்கல் : மழைநீர்சேமிக்க மக்களுக்கு நகராட்சி அழைப்பு

திண்டுக்கல்:மழை பெய்யாவிட்டால், திண்டுக்கல் நகராட்சி மக்களின் குடிநீருக்கு சிக்கலாகி விடும். எனவே மழைநீர்சேமிக்க மக்கள் முன்வர வேண்டும் என நகராட்சி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.திண்டுக்கல் நகராட்சி கூட்டம் அதன் தலைவர் மருதராஜ் தலைமையில் நடந்தது.தலைவர்: திண்டுக்கல் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் ஆத்தூர் நீர் தேக்கத்தில் நீர் மட்டம் 5 அடிதான் உள்ளது. வாரத்திற்கு ஒருநாள் குடிநீர் தர நாங்கள் முயற்சி எடுத்து நேரத்தில், தண்ணீர் வற்றியது, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மழையில்லாததால் காவேரியிலும் குறைந்தளவுதான் நீர் வருகிறது. மழை இல்லாவிட்டால்,குடிநீருக்கு தொடர்ந்து சிக்கல் ஏற்படும்.தனபால்(பா.ஜ.,): திப்புசுல்த்தான், ஐதர்அலிக்கு மணிமண்டபம் கட்ட நகராட்சி இடத்தை தாரை வார்க்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் ஏற்கனவே விநாயகர் சிலை ஊர்வலம் வரும்போது பிரச்னை ஏற்படுகிறது. தற்போதுள்ள நகராட்சி இடத்தை கல்வி அபிவிருத்திக்கு பயன்படும். இதனால் புறநகர்பகுதியில் மணிமண்டபம் கட்டலாம். தீர்மானத்தை நிறுத்தி வைக்க வேண்டும்.(இதற்கு நகராட்சித் தலைவர் மறுப்பு தெரிவித்தால், வெளிநடப்பு செய்தார்).சித்திக்(தி.மு.க.,): திப்பு சுல்தான், ஐதர் மணி மண்டபத்தை வரவேற்கிறேன். அந்த இடத்தில் 6 ஏக்கர் நகராட்சி இடம் கையகப்படுத்த வேண்டும்.சுருளிவேல்(அ.தி.மு.க.,): சுடுகாட்டு கிணற்றில் இருந்து தண்ணீர் மேற்கு மருதாணிகுளத்திற்கு செல்கிறது. மருதாணிகுளத்தில் போர்வெல் உள்ளது. இங்கு மின்

மோட்டார் பொருத்தி நீர் தரலாம். மின்மயானத்தில் ஏற்படும் புகையால், தோல் நோயும், சுவாசக்கோளாறும் ஏற்படுகிறது.

விஜயக்குமார்(தி.மு.க.,): இந்திரா நகர், திருமலைசாமிபுரம் உட்பட பல பகுதிகளில் சாக்கடை, ரோடு அமைக்கவில்லை. பாதியில் பணிகள் நிற்கிறது. துப்புரவு பணிகளும் நடக்காததால், குப்பை குவிந்துள்ளன.ஆனந்த்(தி.மு.க., ): பாதாள சாக்கடை கழிவு நீரை சரியாக எடுக்காததால், வீடுகளுக்குள் கழிவு நீர் புகுந்து விடுகிறது. மின் கம்பங்கள் சரிந்துள்ளன. நாகராஜ்(அ.தி.மு.க.,): பாதாள சாக்கடை குழி மூடிகள் உடைந்துள்ளதால் விபத்து அபாயம் அதிகரித்துள்ளது. தனியார் பள்ளி முன்புள்ள பள்ளத்தில் மண் பற்றாமல், குழியாக உள்ளது. ஜெயந்தி(தி.மு.க.,): பஸ்ஸ்டாண்டை சுற்றி விளக்குகள் எரியவில்லை. தனியார் ஆக்கிரமிப்பால் ரோடுகள் அமைக்கவில்லை. பல முறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை.தலைவர்: பல வார்டுகளுக்கு நிதிகளை அள்ளிக் கொடுத்தாலும், நான் குடியிருக்கும் 8 வது வார்டில் எந்த பணியும் நடக்கவில்லை. பொதுமக்கள் மழை நீர் சேகரிப்பு திட்டத்தை அமல்படுத்த முன் வர வேண்டும். நிலத்தடிநீர் மட்டத்தை பெருக்க வேண்டும் இவ்வாறு விவாதம் நடந்தது.

### தாண்டிக்குடி மலைப்பகுதியில்பலா பழ சீசன் துவக்கம்

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் பலா பழ சீசன் துவங்கியுள்ளது.இம்மலைப்பகுதியில் புல்லாவெளி, பூலத்தூர், கும்பறையூர், தாண்டிக்குடி, அரசன்கொடை, பெரும்பள்ளம், தடியன்குடிசை பகுதியில் பலா மரங்கள் விவசாயத்தில் உள்ளது. இங்கு விளையும் பலாப்பழங்களும் சுவை மிகுந்து காணப்படுவதால் வியாபாரிகள் நேரடியாக தோட்டங்களில் வாங்கி செல்கின்றனர். வழக்கமாக மே இறுதியில் சீசன் துவங்கி ஆகஸ்ட் வரை நீடிக்கும். பருவ மழை பொய்த்த காரணத்தால் எதிர்பார்த்த விளைச்சல் குறைவாக காணப்பட்டது. தாண்டிக்குடி உள்ளிட்ட சில இடங்களில் ஒரளவு மழை பெய்த நிலையில் மகசூல் பாதிக்கவில்லை. மாறாக காய்கள் பருமன் குறைவாக சிறுத்து உள்ளது. ஊத்து பகுதியில் பழம் ஒன்று ரூபாய் நூறு முதல் 200

வரை விற்கப்படுகிறது. கிராம பகுதியில் விவசாயிகள் அதிகபட்சமாக ரூபாய் நூறு முதல் 150 வரை விற்கின்றனர்.

## வெற்றிலை கொடிக்கால் விவசாயிகள் அதிர்ச்சிபாகுபடின்றி நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

தேவதானப்பட்டி:கடந்த ஆண்டு பெரியகுளம் தாலுகா பகுதியில் பெய்தமழை, காற்றுக்கு வெற்றிலைக் கொடிக்கால் பயிர்கள் சேதம் ஏற்பட்டது. ஆனால் விவசாயிகளுக்கு முறையாக நிவாரணம் வழங்கவில்லை என்று புகார் எழுந்துள்ளது.பெரியகுளம் தாலுகாவில் வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம்,சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி, நாகம்பட்டி, ஜி.கல்லுப்பட்டி, கெங்குவார்பட்டி, வைத்தியநாதபுரம் ஆகிய கிராமங்களில் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவது முக்கியத் தொழிலாக உள்ளது. இப்பகுதியில் 300 ஏக்கர் பரப்பளவில் வெற்றிலைக் கொடி பயிரிடப்பட்டுள்ளது.10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூலித் தொழிலாளர்கள் இந்த பணியில் உள்ளனர். பணப்பயிராக கருதப்படும் வெற்றிலை இங்கிருந்து கோயில்பட்டி,ராஜபாளையம், மதுரை, கொடைக்கானல், திண்டுக்கல் உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.மழைச் சேதம்: கடந்த 2012 மே மாதத்தில், பெரியகுளம் தாலுகா பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் வாழை, வெற்றிலைக் கொடிக்கால் பயிர்கள் சேதமடைந்தன. அப்போது தோட்டக்கலைத்துறை, விவசாயதுறை, வருவாய் துறையினர் இணைந்து சேதமதிப்பு குறித்தும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் பட்டியல் தயார் செய்தும் மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்பி வைத்தனர். ஓராண்டுக்கு பிறகு சில நாட்களுக்கு முன்பு, நிவாரணம் பெறும் விவசாயிகள் பட்டியல் வெளியிடப்பட்டது.விவசாயிகள் அதிர்ச்சி: காற்று, மழையால் பாதிக்கப்பட்டதாக 100 க்கும் மேற்பட்ட விவசாயிகளின் பெயர் பட்டியல் தயார் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், தாமரைக்குளத்தில் மட்டும் சிலருக்கு நிவாரணம் கிடைத்துள்ளது. வடுகபட்டி, சில்வார்பட்டி, ஜெயமங்கலம் ஆகிய கிராமங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. இதனால், ஏமாற்றம் அடைந்த விவசாயிகள், தோட்டக்கலைத்துறை மூலம் வெளியிடப்பட்ட

பாதிக்கப்பட்டோர் பட்டியலுடன் சென்று கலெக்டர் பழனிசாமியிடம் மனுக் கொடுத்துள்ளனர். பெரியகுளம் தாலுகாவில் 2012 மே யில் காற்று, மழைக்கு பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கடையம் பகுதியில் எலுமிச்சை விலை வீழ்ச்சி

ஆழ்வார்குறிச்சி : விலை இருக்கும் போது காய் இல்லை.. காய் இருக்கும் போது விலை இல்லை.. என்ற சூழ்நிலையில் எலுமிச்சை வியாபாரிகள் உள்ளனர். கடையம், கீழக்கடையம், மேலக்கடையம், மாதாபுரம், சேர்வைக்காரன்பட்டி,புங்கம்பட்டி, பாப்பான்குளம், பிள்ளைகுளம், ஏ.பி.நாடானூர் உட்பட பல கிராமங்களில் இருந்து எலுமிச்சை பழங்கள் கடையத்திற்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. ஆண்டுதோறும் பெரும்பாலும் எலுமிச்சை பழத்திற்கு தட்டுப்பாடே இருக்காத சூழ்நிலை உள்ளது. கடந்த பத்து தினங்களுக்கு முன் ஒரு பழம் 3 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட எலுமிச்சை பழம் 4 மற்றும் 5 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்தது. கடந்த வாரத்தில் இருந்து தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் எலுமிச்சை பழம் வரத்து அதிகமாகி விட்டது. 50 பைசாவிற்கு கொள்முதல் செய்யப்பட்டு, ஒரு ரூபாய் ஐம்பது பைசா வரை தான் விற்கப்படுகிறது. விலை இருக்கும் போது காய் இல்லை... காய் இருக்கும் போது விலை இல்லை என்ற சூழ்நிலையில் விவசசியகள் தவிக்கின்றனர்.

## பரவலாக பெய்து வரும் மழை கால்நடை தீவன சாகுபடி மும்முரம்

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் பெய்த மழையால், பாசனப்பகுதியில் உள்ள வயல்களில் கால்நடை தீவனம் வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பருவமழை தவறியதால், பவானிசாகர் அணையில் இருந்து பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. தடப்பள்ளி, அரக்கன்கோட்டையில் ஒரு போகத்துக்கும், எல்.பி.பி., வாய்க்காலில் உயிர் நீர் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. கிணறு மற்றும் போர்வெல் உள்ள விவசாயிகள் மட்டுமே, விவசாய பணிகள் மேற்கொள்கின்றனர். பல்வேறு இடங்களில், 60 முதல், 100 அடி ஆழ்குழாய் கிணறு வற்றிவிட்டதால், விவசாயிகள் தண்ணீரின்றி

தவித்து வருகின்றனர்.

கோபி சுற்று வட்டாரத்தில் சென்ற சில நாட்களாக பரவலாக மழை பெய்துள்ளது. இம்மழையை பயன்படுத்தி, பாசனப்பகுதியில் உள்ள வயல்களில் கால்நடைகளுக்கு பயன்படும் வகையில், தீவன பயிர் வளர்க்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

தடப்பள்ளி பாசன விவசாயிகள் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்ட பகுதியாக கோபி மற்றும் சுற்றுவட்டார பகுதிகள் உள்ளது. நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி, மானாவாரி பயிர்கள், பயறு வகைகள் என ஆண்டுக்கு இருபோகம் சாகுபடி செய்யப்படுகிறது. கூலி ஆட்கள் பற்றாக்குறை, உரங்கள் விலை உயர்வு போன்றவற்றால் நாளுக்கு நாள் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

பருவ மழை பொய்த்ததால் நெல் பயிரிடும் விவசாயிகள், நெல் பயிரிட முடியாமல் பாதிக்கப்பட்டனர்.

கோபி சுற்று வட்டாரத்தில் சென்ற சில நாட்களாக பரவலாக மழை பெய்தது. இம்மழையை பயன்படுத்தி பாசனப்பகுதியில் உள்ள வயல்களில் மாடுகளுக்கு தீவனமாக பயன்படும் சோளப்பயிர் பயிரிட்டுள்ளோம். இதன் மூலம கால்நடைகளுக்கு தேவையான தீவன தட்டுப்பாடு குறையும், என்றனர்.

## நடமாடும் மண் பரிசோதனை வாகனம் 5 மாவட்டத்தில் டிரைவர்கள் இன்றி வீண்

ஈரோடு: விவசாயிகளை தேடிச்சென்று, மண் மாதிரிகளை ஆய்வு செய்து உதவிடும் நோக்கில், இரண்டு கோடி ரூபாயில் ஐந்து மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நடமாடும் மண் பரிசோதனை வாகனங்கள், டிரைவர்கள் நியமிக்காததால், இரண்டு மாதமாக வீணாக நிறுத்தப்பட்டுள்ளது.

தமிழக வேளாண் துறை, காலநிலை, மழையளவு, நீராதாரம், மண் வளத்தை கணக்கிட்டு, விவசாயிகள் தங்கள் விளை நிலத்தில், எப்போது, எந்த பயிர் செய்யலாம் என்பது குறித்தும், மானிய விலையில் விதைகள், உரங்களையும் வழங்குகிறது. தவிர உற்பத்தி பொருட்களுக்கு சந்தை ஏற்படுத்தி தரும் பணிகளை செய்து வருகிறது.

மண் மாதிரிகளை வேளாண் துறையில் கொடுத்து,பரிசோதித்து, என்ன பயிர் செய்யலாம் என அறிந்து செல்கின்றனர். இப்பரிசோதனையில், மண்ணில் உள்ள தளைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, நுண்ணூட்டங்களின் அளவை கணக்கிட்டு, விவசாயிகளுக்கு மண் மாதிரி அட்டைகள் வழங்குவர்.

கடைக்கோடி கிராமத்தில் இருந்து, நகர்ப்புறத்தில் உள்ள வேளாண் அலுவலகத்துக்கு வந்து, மண் பரிசோதனை செய்து எடுத்துச்செல்ல சிரமங்கள் ஏற்படுவதால், அரசு சார்பில் நடமாடும் ஆய்வகங்கள் வேளாண் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச்சில், ஈரோடு, மதுரை, நாமக்கல், காஞ்சிபுரம், திருவண்ணாமலை என, ஐந்து மாவட்ட வேளாண் அலுவலகத்துக்கு, இரண்டு கோடி ரூபாய் மதிப்பிலான நடமாடும் நவீன மண் பரிசோதனை கூட வாகனம் வழங்கப்பட்டது.

முற்றிலும் கணினி மயமான மண் பரிசோதனை கூடத்தை, ஐதராபாத் எலக்ட்ரானிக் கார்ப்பரேசன் ஆஃப் இந்தியா நிறுவனம் வடிவமைத்து வழங்கியுள்ளது. ஒவ்வொரு வாகனமும் தலா, 40 லட்சம் மதிப்புடையதாகும்.

தினமும், அலுவலர் ஒருவர், 50 மண் மாதிரிகளை இக்கூடத்தில் பரிசோதிக்கலாம். ஐந்து அலுவலர்கள் வீதம், 250 மண் மாதிரிகளை ஆய்வு செய்ய முடியும். மண் மாதிரி ஆய்வு ஒன்றுக்கு, 10 ரூபாயும், நுண்ணூட்டங்கள் அளவினை கண்டறிய, 20 ரூபாய் கட்டணமாக வசூலிக்க முடியும்.

விவசாயிகளுக்கு உதவிடும் நவீன நடமாடும் பரிசோதனை கூடத்தை வழங்கிய அரசு, வாகனத்தை இயக்க டிரைவர்களை நியமிக்கவில்லை. இதனால் மூன்று மாதமாக பயனற்று வீணாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதுபற்றி வேளாண் துணை அதிகாரிகள் கூறியதாவது:

புதிய நடமாடும் மண் பரிசோதனை கூட வானங்களை, கனரக வாகன ஓட்டுனர்கள் மட்டுமே இயக்க தகுதியுடையர்கள் ஆவர். ஒரு மாதத்துக்கு, 135 லிட்டர் டீஸல் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

மாதத்துக்கு, 700 கி.மீ., தூரம் மட்டுமே இயக்க முடியும். மூன்று மாதமாக டிரைவரை நியமிக்காததால், வாகனத்தை இயக்க முடியவில்லை. தற்காலிக டிரைவர்களை நியமித்து,

வாகனத்தை இயக்கும்படி, உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர். வாகனத்துக்கு பாதிப்பு ஏற்பட்டால் யார் பொறுப்பு ஏற்பது, எனக்கூறினர்.

## மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகளிடையே இறுதிக் கட்டத்தை எட்டிய விதைப்பு பருவம்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் பருவம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், போதிய மழையின்றியும், வாய்க்காலில் தண்ணீர் திறப்புக்கான சாத்தியமில்லாததால், விவசாயிகள் மஞ்சள் விதைப்பை மேற்கொள்ளவில்லை. நடப்பாண்டு, 4.88 லட்சம் குவிண்டால் மஞ்சள் உற்பத்தி அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மஞ்சள் உற்பத்தியில், ஈரோடு மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. கர்நாடகா, ஆந்திரா மாநில மஞ்சள் உற்பத்திக்கு, சவாலாக அமைந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி பாசனத்தின் மூலம், 6,000 எக்டேரும், காலிங்கராயன் வாய்க்கால் பாசனம் மூலம், 200 எக்டேர், தடப்பள்ளி பாசனத்தின் மூலம், 200 எக்டேரில் மஞ்சளை விவசாயிகள் பயிரிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

ஆண்டுதோறும் பங்குனி, சித்திரை மாதத்தில், மாவட்டத்தில், 80 சதவீதம் மஞ்சள் பயிரிடும் விவசாயிகள், 8ம் நெம்பர் ரக மஞ்சளை பயிரிட்டு விடுவர். தவறும் பட்சத்தில் வைகாசி இறுதி மற்றும் ஆடி முதல் வாரத்துக்குள், 20 சதவீதம் விவசாயிகள், பி.டி.எஸ்., 10 ரகம், மற்றும் நாட்டு வகை சம்பா மஞ்சளை பயிரிடுவது வழக்கம்.

பங்குனி மாதம் மஞ்சள் நடவு செய்தால், தை மாதம் துவங்கி மாசி இறுதியில் அறுவடை முடிந்துவிடும். கடந்தாண்டு போதிய மழையின்றி வறட்சியடைந்துள்ளது. அணைகள் மட்டுமின்றி, கிணறு, ஆழ்குழாய்களிலும் தண்ணீர் வற்றியுள்ளது. இந்நிலையில், நடப்பாண்டு மஞ்சள் பயிரிட விதைப்பு பருவம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இன்று வரையிலும் மஞ்சளை விதைக்கவில்லை.

ஆடி முதல் வாரம் முடிய ஒரு வாரகாலமே உள்ள நிலையில், வாய்க்காலில் தண்ணீர் வரத்து நடப்பாண்டு சாத்தியமில்லை. பருவமழை முன்கூட்டியே துவங்கியிருந்தாலும், மஞ்சள் விதைப்புக்கான அளவு மழை கிடைக்கவில்லை. எனவே, விவசாயிகள் மஞ்சள் விதைப்பில் அக்கரை காட்டவில்லை.

இதுகுறித்து விவசாயி பெரியசாமி கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில், 6,400 ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்படுவது வழக்கம். பங்குனி மூன்றாவது வாரத்தில் நெம்பர் 8 ரக மஞ்சலை பயிரிடுவர். இவ்வகை மஞ்சள் கிழங்கு அழுகல், இலை சுருட்டு நோய் தாக்குதல் குறைவாகவும், மகசூல் அதிகமாக கிடைக்ககூடும்.

ஆனால், தண்ணீர் பிரச்னையால் மஞ்சள் விதைப்பு பருவம் முடியும் நிலையில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. 15 நாட்களில் பருவமழை தேவைக்கு ஏற்ப பெய்தால் மட்டும், கிணற்று பாசனத்தை நம்பி, தாமதமாக பயிரிட வாய்ப்பு உள்ளது. விவசாயிகள், மஞ்சள் வியாபாரிகள் இருப்பில் வைத்துள்ள மஞ்சளே, அடுத்து வரும் இரண்டு ஆண்டு பயன்பாட்டுக்கு உள்ளது.

நடப்பாண்டு உற்பத்தியாக வேண்டிய, 4.50 லட்சம் குவிண்டால் மஞ்சள் உற்பத்தி முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு உற்பத்தி செய்து இருப்பு வைத்த மஞ்சளை விற்பனை செய்துவிட்டு, ஆந்திரா மாநிலத்தில் குவிண்டால், 5,000 க்கு கிடைப்பதால் பல நூறு டன் மஞ்சளை வாங்கி வந்து, வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும் இருப்புவைத்து வருகின்றனர்.

வெளிமாநில மஞ்சள் வரத்தால், தமிழக மஞ்சளின் விலையும் குவிண்டாலுக்கு, 1,200 ரூபாய் வரையில் குறைந்துள்ளது. ஆறு மாதத்தில் மஞ்சள் தேவை அதிகமாகும், கட்டாயமாக விலை உயர்ந்து விடும் என்பதில் மாற்று கருத்து இல்லை, எனக்கூறினார்.

## தாக்கம் அதிகரிப்பால், காய்கறி மற்றும் பூக்களின் விலை கட்டுக்கடங்காமல் உயரத்தில்

பறந்தது. அதிகளவு முகூர்த்தம் இருந்ததால், காய்கறி, பூக்களின் விலை தாறுமாறாக உயர்ந்தது.

வைகாசி மாதத்தின் கடைசி முகூர்த்தம் நேற்றுடன் முடிந்தது. இதனால், காய்கறி, பூக்களின் விலையில் நேற்று சரிவு ஏற்பட்டது. குறிப்பாக, பூக்களின் விலை அதிரடியாக குறைந்தது. நேற்று முன்தினம், 200 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ மல்லி, நேற்று 30 ரூபாய்க்கு விற்றது. அதேபோல, திருமண மாலை கட்ட பயன்படும் சம்பங்கி, நேற்று முன்தினம், 700 ரூபாய்க்கு விற்றது. நேற்று அதிரடியாக விலை குறைந்து, 100 ரூபாய்க்கு விற்றது.

பூக்களின் வரத்து ஓரளவுக்கு இருந்தாலும், அதனுடைய பயன்பாடு குறைவு தான் என்பதால் அதிரடியாக விலை குறைந்து காணப்பட்டது. ஆனால், காய்கறி விலையில் பெரிய அளவு மாற்றம் ஏற்படவில்லை. காய்கறியின் நுகர்வு அதிகம் என்பதால், அதன் விலையில் பெரிய மாற்றம் இல்லை. ஆயினும், மொத்த விற்பனையில் ஓரளவு குறைந்து காணப்பட்டது. சில்லரை விற்பனையில் பெரிய மாற்றம் இல்லை. ஆங்கில மாதமான ஜூன், 15ம் தேதி, 32 தேதிகளை கொண்ட, ஆனி மாதம் பிறக்கிறது. ஆனி மாதத்தில், ஏழு சுபமுகூர்த்தத் தேதிகள் வருகிறது. வைகாசியைக் காட்டிலும், ஆனியில் இரண்டு முகூர்த்தங்கள் குறைவு என்பதால், ஓரளவு காய்கறி, பூக்களின் விலை குறைய வாய்ப்புள்ளது.
அதைத்தொடர்ந்து, ஜூலை, 17ம் தே

## முயல் பண்ணைகளுக்குமானியம் வழங்க கோரிக்கை

விழுப்புரம்:முயல் பண்ணைகளுக்கு மத்திய, மாநில அரசுகள் மான்யம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு முயல் வளர்ப்போர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழ்நாடு முயல் வளர்ப் போர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரத்தில் நேற்று நடந்தது. மாநிலத் தலைவர் முரளிதரன் தலைமை தாங்கினார். செயலாளர் சுந்தரகாந்தன் முன்னிலை வகித்தார். பொரு ளாளர் சுரேஷ் வரவேற்றார். முயல் பண்ணை வைத்துள்ளவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் மானிய விலையில் உபகரணம் மற்றும் தீவனங்கள் வழங்க வேண்டும். இலவச மின்சாரம் வழங்க வேண்டும். கோழிக்கறியை விட முயல் கறி புரதச் சத்து அதிகமாகவும், கொழுப்பு சத்து குறைவாகவும் உள்ளதால், பொது மக்கள் இவற்றை விரும்பிச் சாப்பிடும் வகையில், அரசு சார்பில் விளம்பரம் செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சேலத்தில் கோடை மழை சரிவு தென் மேற்கு பருவமழையை நம்பியுள்ள விவசாயிகள்

சேலம்: சேலம் மாவட்டத்தில், நடப்பாண்டு பெய்த கோடை மழை, சராசரி மழையை விட மிகவும் குறைந்துள்ளதால், விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். தென் மேற்கு பருவ மழையாவது, பயிரைக் காப்பாற்றுமா என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். தமிழகத்தில், 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் கோடை மழை மிகவும் குறைந்ததால், விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். மழை குறைவால் விவசாய பொருட்களின் விலையும்

கூடி வருகிறது. சேலம் மாவட்டத்தில் ஜனவரி, 1.6 மி.மீ., பிப்ரவரி, 2.7, மார்ச், 29, ஏப்ரல், 62.4, மே, 117.1 மி.மீ., என, மொத்தம், 212.8 மி.மீ., சராசரி மழை அளவு உள்ளது. ஆனால், சேலம் மாவட்டத்தில் நடப்பாண்டு, 81.7 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது. சேலம் மாவட்ட வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: சேலம் மாவட்டத்தில், நடப்பாண்டு ஜனவரி, ஃபிப்ரவரி மாதத்தில், ஒரு நாள் கூட மழை பெய்யவில்லை. மார்ச்சில், 7 மி.மீ., ஏப்ரலில், 41.2 மி.மீ., மே மாதத்தில், 33.5 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது. கடந்த, 2012 ஜனவரி, ஃபிப்ரவரியில் மழை பெய்யவில்லை. மார்ச்சில், 0.2 மி.மீ., ஏப்ரலில், 38.5 மி.மீ., மே, 77.9 மி.மீ., என, மொத்தம் 116.6 மி.மீ., மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, 2011ல் ஜனவரியில், 2.3 மி.மீ., ஃபிப்ரவரி, 5.2 மி.மி., மார்ச், 20.9 மி.மீ., ஏப்ரல், 145.7 மி.மீ., மே, 48.6 மி. மீ., என மொத்தம், 222.7 மி.மீ., மழை கொட்டி சராசரி மழை அளவை தாண்டியது. சராசரி மழையளவான, 212.8 மி.மீ மழையை விட, நடப்பாண்டு, 131.1 மி.மீ., அளவு மழை குறைந்துள்ளது. மழை குறைவால் விவசாய பொருட்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. ஏரி, குளங்களில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் மரங்கள் காய்ந்து கிடக்கின்றன. சேலம் மாவட்டம் மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் கோடை மழை பெய்யாமல் ஏமாற்றியுள்ளதால், விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். தற்போது தென் மேற்கு பருவமழை துவங்கியுள்ளது. இந்த மழையை நம்பி விவசாயிகள் ஆவலுடன் உள்ளனர். இதற்காக வயல்களில் விவசாயிகள் தகுந்த பயிர்களை பயிரிட்டுள்ளனர்.

## விளைச்சல் குறைவால் வெண்டை விலை உயர்வு கொங்கணாபுரத்தில் இருந்து கேரளாவுக்கு ஏற்றுமதி

சேலம்: இடைப்பாடி, கொங்கணாபுரம் பகுதிகளில் உள்ள விவசாயிகள், வெண்டைக்காய் பயிரிட்டு வருகின்றனர். மழை இல்லாததால், விளைச்சல் குறைந்து, அதன் விலை உயர்ந்துள்ளது. மொத்த வியாபாரிகள் அவற்றை, கேரளாவுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர்.

மானாவரிப் பயிரான வெண்டை, கடலை, தக்காளி போன்றவை, மழையை நம்பியே உள்ளது. சேலம் மாவட்டத்தில், சங்ககிரி, இடைப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றிய பகுதிகளில், வெண்டை அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. வெண்டை விதைத்து, 40 நாட்களில், செடியில் பூ துளிர்விடும்.

அதன் பின், காய் வர ஆரம்பிக்கும். நான்கு மாதம் வரை தொடர்ந்து காய்களை அறுவடை

செய்ய முடியும். ஒரு செடிக்கு, 30 காய் வீதம் கிடைக்கும். பூச்சி மருந்து, உரம் என, 25 ஆயிரம் ரூபாய் செலவாகும். நான்கு மாதத்தின் முடிவில், செலவினம் போக மீதம், 25 ஆயிரம் ரூபாய் மட்டுமே விவசாயிக்கு லாபமாக கிடைக்கும்.
கடந்த ஓராண்டாக சரிவர மழை இல்லாததால், வெண்டை உற்பத்தி குறைந்துள்ளது. பெரும்பாலும், கொங்கணாபுரம், வைகுந்தம் வெண்டைக்காய்க்கு, கேரளாவில் தனி மவுசு உண்டு. இப்பகுதியில் உள்ள காய்கறி வியாபாரிகள், விவசாயிகளிடம் மொத்தமாக வெண்டையை வாங்கி, அவற்றை கேரளாவுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். ஒரு கிலோ, ஏழு ரூபாய், பத்து ரூபாய் என்றிருந்தது, தற்போது, கிலோ, 20 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
கன்னந்தேரியைச் சேர்ந்த விவசாயி பச்சமுத்து கூறுகையில், ""வெண்டை விலை தற்போது தான் சற்று உயர்ந்துள்ளது. மானாவரிப் பயிரான வெண்டையை, ஆறு மாதம் வரை வைத்து மகசூலை பெற முடியும். அதன்பின், அந்த நிலத்தில் மாற்றுப்பயிரை தான் நட முடியும். ஆறு மாதத்துக்கு, 20 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால், கூடுதலாக, 20 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். நாங்கள் காயை அறுத்து, மொத்த வியாபாரியிடம் கொடுத்து விடுவோம். அவர்கள், அதற்கான விலையை எங்களுக்கு கொடுப்பர். மழையை நம்பி, நிலத்தை உழுது போட்டுள்ளோம்," என்றார்.

## வெளிநாட்டு பல்கலை மாணவர்கள் வருகை:பால் உற்பத்தி தெரிந்துகொள்ள பயிற்சி

நாமக்கல்: பால் உற்பத்தியை அதிகரிக்கவும், பொருளாதாரத்தை உயர்த்தவும், தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்வதற்காக, மிக்சிகன், மலாவி லூனார் பல்கலை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு, நாமக்கல்லில் ஒரு மாத பயிற்சி அளிக்கப்படுகிறது.
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை, அமெரிக்காவின் மிக்சிகன் மாநில பல்கலை மற்றும் மலாவி நாட்டின் லூனார் பல்கலையின் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், அம்மாணவர்களுக்கு ஒருமாத பயிற்சி அளிக்கப்படுகிறது.
அதற்காக, மலாவி பல்கலை பேராசிரியர்கள் ஃபானி சிக்வா, ஏக்னஸ் மவாங்விலா, திமோதி கான்ட்வே, ஜோசப் டயன்ஷா, ரோனி மூவேலா, வின்சென்ட் மீயோதா, ஆலிவர் பேக்லி, மிக்சிகன் மாநில பல்கலை மாணவர்கள், ஆடம் அய்ஷார், கில்ஷே ஆடம்ஸ்,

செல்ஷியா வனாச்சே, எமிலி ஹரீஸ், லாரா ஜன்ஸ்ட்ரா ஆகிய, 13 பேர், நாமக்கல் வந்தனர்.

அவர்கள், கல்லூரி வளாகத்தை சுற்றிப் பார்த்தனர். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில், மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் பாடங்களின் விபரங்கள் குறித்து கேட்டறிந்தனர். மேலும், கால்நடை பராமரிப்பு முறைகள், பால் உற்பத்திக்கு கையாளும் தொழில் நுட்பங்கள் பற்றியும் விளக்கப்பட்டது.

முதல் கட்டமாக, கோழிப்பண்ணைகளில், நோய் கிருமிகளை கட்டுப்படுத்தும் மருந்துகளின் வீரியம் கண்டறியுமம் சோதனை மாதிரிகள் எடுக்கப்பட்டது. அதை தொடர்ந்து, கல்லூரியின் பால் வளத்துறை, பண்ணை வளாகத்தை நேரில் பார்வையிட்டனர்.

தொடர்ந்து, ஆவின் பால் கொள்முதல் சங்கத்துக்கு சென்று, சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் கட்டமாக, ராசிபுரம் பகுதியில், வீட்டு முறையில் நெய் தயாரிக்கும் பயிற்சியை நேரில் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

வெண்ணையை, நெய்யாக மாற்ற பயன்படுத்தப்படும் தொழில் நுட்பத்தை ஆர்வமுடன் பார்த்தனர். சேலம் ஆவின் பால் பதனிடும் தொழிற்சாலை, ஈரோடு மில்கி மிஸ்ட் பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு குறித்து, நேரடி செயல் விளக்கம் மூலம் செய்து காண்பிக்கப்பட்டது.

மேலும், பண்ணைகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளை பரிசோதனை செய்யும் ஆய்வும் நடத்தப்பட்டது. இந்த கூட்டு ஒப்பந்த முறைக்கு, வி.எஸ்.ஏ.ஐ.டி., வி.எஸ்.டி.ஏ., நிதி உதவி அளித்துள்ளது.

இது குறித்து கல்லூரி முதல்வர் துரைசாமி, துறைத் தலைவர் டாக்டர் ரமேஷ்சரவணகுமார், பேராசிரியர் மோகன் ஆகியோர் கூறியதாவது:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலை, மிக்சிகன் மாநில பல்கலை மற்றும் மலாவி நாட்டின் லூனார் பல்கலை ஆகியவை கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, பால் வளத்தை பெருக்க, நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளை, அங்கு சென்று விளக்கவும், அங்குள்ள மாணவர்களை இங்கு வரவழைத்து போதிய பயிற்சி வழங்க வேண்டும். நமது சாதனைகளை வெளிப்படுத்தவும், ஆராய்ச்சியை விரிவுப்படுத்தவும், நிதியுதவி பெறுவதற்கு இந்த ஒப்பந்தம் போடப்படுகிறது. இம்மாணவர்களுக்கு, பால் வளத்தை பெருக்கும் உத்தி, தீவனம் அளிக்கும் விதம், கால்நடைகளை பராமரிக்கும் விதம்,

மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்றம் செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. குறிப்பாக, அவர்கள் இங்கு வந்ததன் நோக்கம், தங்கள் நாட்டில் பால் வளத்தை அதிகரிக்கவும், பொருளாளதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான தொழில் நுட்பங்களை தெரிந்து கொண்டு, தங்கள் நாட்டில் செயல்படுத்துவதற்காக, இப்பயிற்சியை பெறுகின்றனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விவசாய தொழிலாளர் சங்க பொதுக்குழு கூட்டம்

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த நல்லம்பள்ளியில், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாநில பொதுக்குழு கூட்டம் நடந்தது.

சங்க தலைவர் தங்கமணி, பத்மாவதி, பழனிசாமி ஆகியோர் தலைமை வகித்தனர். ஏ.ஐ.டி.யு.சி., தேசிய துணை தலைவர் தியாகராஜன் அரசியல் நிகழ்வுகள் குறித்து பேசினார். விவசாய தொழிலாளர் சங்க தேசிய செயலாளர் புதுச்சேரி ராமமூர்த்தி, மத்திய நிர்வாக குழு முடிவுகள் குறித்து பேசினார்.

மாநில செயலாளர் பெரியசாமி வேலை அறிக்கை தாக்கல் செய்தார். பொது செயலாளர் முத்தரசன், வரும், 16ம் தேதி விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் நடக்கும் அகில இந்திய வேலை நிறுத்தம் குறித்து விளக்கி பேசினார். "வரும், 16ம் தேதி விவசாய தொழிலாளர்களுக்கு தனி ஓய்வூதிய சட்டம் நிறைவேற்ற கோரியும், 3,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை வலியுறத்தி வேலை நிறுத்தம், மறியல் போராட்டம் நடத்துவது' உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

## விவசாயிகள் சங்க சிறப்பு பேரவை கூட்டம்

தர்மபுரி: தர்மபுரியில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட சிறப்பு பேரவை கூட்டம் நடந்தது.

விடுதலை விரும்பி, மாணிக்கம் ஆகியோர் தலைமை வகித்தனர். சின்னசாமி வரவேற்றார். மாநில பொது செயலாளர் துரை மாணிக்கம் கூட்டத்தை துவக்கி வைத்து பேசினார். இ.கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எம்.எல்.ஏ., நஞ்சப்பன், மாவட்ட பொறுப்பாளர் தேவராஜ், ஆகியோர் தர்மபுரி மாவட்ட விவசாயிகள் பிரச்னைகள் குறித்து விளக்கினர்.

புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. மாவட்ட தலைவராக சின்னசாமி, செயலாளராக

தேவராஜன், துணை தலைவர்களாக சிவலிங்கம், ராமமூர்த்தி, துணை செயலாளர்களாக மாணிக்கம், ராமநாதன், பொருளாளராக முருகேசன், 47 மாவட்ட குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.
"தர்மபுரி மாவட்டத்தில் பல ஆண்டாய் விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்கிட வேண்டும். விவசாய பாதுகாப்பு திட்டங்களை நிறைவேற்றிட வேண்டும். சின்னாறு உபரி நீரை நெல்லூரில் தடுப்பணை கட்டி, பென்னாகரம், நல்லம்பள்ளி , தர்மபுரி, பாலக்கோடு, காரிமங்கலம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள 100 ஏரிகளுக்கு கால்வாய் அமைத்து நீர் பாசன வசதிகள் செய்து தர வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.06.2013 A.M**

---

## மீண்டும் காலநிலை மாற்றம் காற்றுடன் மழைப்பொழிவு

ஊட்டி, :நீலகிரியில் கடந்த சில தினங்களாக நிலவி வந்த காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு மீண்டும் காற்றுடன் கூடிய மழை பெய்யத் துவங்கியுள்ள நிலையில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆண்டுதோறும் மே மாதம் இறுதி வாரத்தில் துவங்கி நவம்பர் மாதம் வரை ஊட்டியில் சூறாவளி காற்றுடன் கூடிய கன மழை பெய்வது வழக்கம். நவம்பர் மாதம் துவங்கி பிப்ரவரி மாதம் வரை கடும் பனி பொழிவினால் குளிர் வாட்டியெடுக்கும். மார்ச் முதல் மே மாதம் இறுதி வாரம் வரை வெயில் கொளுத்தும். ஆனால் இம்முறை கடந்த பிப்ரவரி மாதம் முதலே ஊட்டியில் வெயில் வாட்டியெடுத்தது. மே மாதத்தில் பெய்யும் கோடை மழையும் இம்முறை பெய்யவில்லை. இதனால் விசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். ஊட்டியில் இம்முறை பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில் இம்மாத துவக்கத்தில் இரு தினங்கள் காற்றுடன் கூடிய கன மழை பெய்தது. இதனால் முன்னதாகவே பருவமழை துவங்கியதாக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கருதினர். ஆனால் மழை நீடிக்கவில்லை. மீண்டும் வெயில் அடித்து வந்தது. இதனால் இம்முறையும் பருவமழை ஏமாற்றி விடுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் இருந்தனர்.

இந்நிலையில் நேற்று காலை முதல் மீண்டும் நீலகிரியில் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டது. காலை முதல் கடும் மேகமூட்டமும், அவ்வப்போது காற்றுடன் கூடிய சாரல் மழை பெய்யத் துவங்கியது. இதனால் ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடும் குளிர் நிலவியது. இதே போன்று மாவட்டத்தின் பல பகுதிகளில் காலை முதல் மழை பெய்து வருகிறது. காற்றுடன் தொடர்ந்து சாரல் மழை பெய்து வரும் நிலையில்

விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஊட்டியில் காலை முதலே மழை பெய்ததால் தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா போன்ற பகுதிகளில் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறைவாக காணப்பட்டது. பெரும்பாலான சுற்றுலா பயணிகள் குளிரால் லாட்ஜ் மற்றும் காட்டேன் அறைகளில் முடங்கினர். ஒரு சில பயணிகள் மட்டுமே சுற்றுலா தலங்களில் வலம் வந்தனர். லேசான காற்றுடன் கூடிய மழை பெய்து வரும் நிலையில் குளிர் அதிகரித்துள்ளது. அதனால் ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மீண்டும் விவசாய பணிகளை மேற்கொள்ள விவசாயிகள் துவக்கியுள்ளனர். எனினும் காற்று வீசுவதால் மழை தொடர வாய்ப்பில்லை என விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

## விவசாயிகள் ஒப்பாரி போராட்டம் வறட்சி நிவாரணம் வழங்காததை கண்டித்து

திருவண்ணாமலை, :தமிழ்நாடு

விவசாயிகள் சங்கம் மற்றும் கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகம் முன்பு ஒப்பாரி போராட் டம் நடந்தது. விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் எஸ்.பலராமன் தலைமை வகித் தார். மாநில பொதுச் செயலாளர் டி.ரவீந்திரன், மாவட்ட செயலாளர் எம்.சிவக்குமார், மாநில துணை செயலாளர் ஜனார்தனன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

தி.மலை மாவட்டத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும், பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்துள்ள அனைத்து பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும், திருவண்ணாமலை மாவட்டத்தில் வறட்சி பாதிப்பு இல்லை என அறிக்கை அளித்துள்ள மாவட்ட நிர்வாகத்தை கண்டித்தும் முழக்கமிட்டனர்.

அதைத்தொடர்ந்து, வறட்சி நிவாரணம் வழங்காததை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் ஒப்பாரி வைத்து தங்கள் எதிர்ப்பை வெளிப் படுத்தினர். அதற்கு போலீ சார் எதிர்ப்பு தெரிவித்ததால், வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர், போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பில், நிர்வாகிகள் மட்டும் சென்று கலெக்டரிடம் மனு அளிக்க போலீசார் அனுமதி அளித்தனர்.

அதனால், மற்றவர்கள் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதைத்தொடர்ந்து, கலெக்டரின் நேர்முக உதவியாளர்(பொது) முருகேசன், வேளாண் உதவி இயக்குனர் சந்திரசேகரன் ஆகியோர் அலுவலகத்துக்கு வெளியே வந்து அனைவரிடமும் மனுக்களை பெற்றுக்கொண்டனர்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம்


ஆற்காடு, :

ஆற்காடு நகராட்சியில் சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம் நேற்று மாலை நடந்தது. நகராட்சி தலைவர் ஆர்.புருசோத்தமன் தலைமை தாங்கினார். துணை தலைவர் எஸ்.கீதா சுந்தர் முன்னிலை வகித்தார். சமுதாய அமைப்பாளர் ம.துரை வரவேற்றார்.

இதில், ஆணையாளர் செ.பாரிஜாதம் கலந்துகொண்டு பேசுகையில், 'வரும் 30ம் தேதிக்குள் ஆற்காடு நகராட்சிக்கு உட்பட்ட 13,640 வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி கட்டாயம் அமைக்க வேண்டும். இதுகுறித்து, மகளிர் சுய உதவி குழுவினர் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்' என்றார்.

இதில், நகராட்சி பொறியாளர் கார்த்திகேயன், நகரமைப்பு அலுவலர் சாந்தி, கவுன்சிலர்கள் கே.ஏ.சுந்தரம், ஏ.தண்டபாணி, சுரேஷ், சசிகுமார், மல்லிகா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழை நெல்லை, குமரி மாவட்ட அணைகள் நீர்மட்டம் உயர்வு



நெல்லை : நெல்லை மாவட்டத்தில் ஜூன் 1ம் தேதி குறித்த நேரத்தில் தென் மேற்கு பருவமழை தொடங்கியுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில்

பெய்து வரும் மழை காரணமாக பாபநாசம்¢, சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பாபநாசம் அணையில் 62.55 அடியாக இருந்த நீர்மட்டம் 63.85 அடியானது. அணைக்கு விநாடிக்கு 687 கன அடி தண்ணீர் வருகிறது. சேர்வலாறு அணையில் 78.67 அடியாகவும், மண¤முத்தாறு அணையில் நீர்மட்டம் 71 அடியாகவும், கடனாநதியில் 41 அடி, குண்டாறு அணையில் 15.08 அடி, ராமநதி அணையில் 53.50 அடியாகவும் நீர்மட்டம் உள்ளது.

நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை அணைகளின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது. செங்கோட்டையில் அதிகபட்சமாக 18 மிமீ மழை பதிவானது. குமரி: குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மீண்டும் மழை பெய்து வருகிறது. மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் பலத்த மழை கொட்டுகிறது. கடலோர பகுதிகளில் சூறைக்காற்றுடன் மழை பெய்துவரும் நிலையில் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகிறது.

வரும் 15ம் தேதிக்கு பின்னர் அணைகளில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என்று பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது. இதற்கிடையே விவசாயிகள் சாகுபடி பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். நேற்று காலைவரை அதிகபட்சமாக இரணியலில் 94.5 மி.மீ மழை பதிவாகி இருந்தது. அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்பு உள்ளது.

**வானிலை மையம் அறிவிப்பு தென் மாவட்டங்களில் 2 நாட்கள் கனமழை**



சென்னை : கடந்த சில நாட்களாக தமிழகத்தில் வெப்ப சலனம் நீடித்து வருகிறது. இதனால் உருவான காற்று சுழற்சியும் தமிழகம், புதுச்சேரியில் நிலை கொண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று குளச்சல் பகுதியில் 50 மிமீ மழை பெய்துள்ளது. வால்பாறை 40 மிமீ, சின்னகல்லார், தக்கலை, குழித்துறை 30 மிமீ, நடுவட்டம், தேவாலா, அரக்கோணம், நாகர்கோவில், பூதப்பாண்டி 20 மிமீ, பேச்சிப்பாறை, இரணியல், சோளிங்கர், செங்கல்பட்டு, திருவாலங்காடு, ராதாபுரம், போளூர் 10 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில், வளி மண்டலத்தில் ஏற்பட்ட காற்று சுழற்சி மேலும் வலுப்பெற்றுள்ளதால் தமிழகம் புதுச்சேரியில் இரண்டு நாட்களுக்கு பரவலாக மழை பெய்யும். குறிப்பாக தென் மாவட்டங்களில் கனமழை பெய்யும். சில இடங்களில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். சில இடங்களில் 93 டிகிரி வரை வெயில் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

13.06.2013 A.M

## குமரி மாவட்டத்தில் தொடர் மழை குளச்சலில் 48 மி.மீட்டர் பதிவு

நாகர்கோவில்,

குமரி மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. குளச்சலில் 48 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

தொடர் மழை

குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக சாரல் மழை பெய்து வருகிறது. நாகர்கோவிலில் நேற்று அதிகாலை 4 மணி அளவில் பலத்த மழை பெய்தது. அதன்பிறகு மழை தூறிக்கொண்டே இருந்தது. நேற்று பகல் முழுவதும் வானத்தில் சூரியனையே பார்க்க முடியவில்லை. குளிர்ந்த காற்று வீசியது. இதனால் நாகர்கோவில் டபிள்யு.சி.சி. ரோடு, உள்பட முக்கிய இடங்களில் தண்ணீர் வெள்ளம் போல் தேங்கியது. நேற்று காலை மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

48 மி.மீட்டர் பதிவு

குமரி மாவட்டத்தில் காலை 8 மணி வரை பெய்த மழை அளவில் குளச்சலில் அதிகபட்சமாக 48 மி.மீட்டர் பதிவாகி இருந்தது. மற்ற பகுதிகளில் பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு :

திற்பரப்பு 32, அடையாமடை 31, பெருஞ்சாணி 29.6, புத்தன்அணை 28.4, குருந்தங்கோடு 27.4, ஆனைகிடங்கு 26, கோழிப்போர்விளை 24, பாலமோர் 23.3, கொட்டாரம் 22.6, முக்கடல் 20, நாகர்கோவில் 19.6, சிற்றாறு1 18.2, முள்ளங்கினாவிளை 18, பூதப்பாண்டி 17.8, மயிலாடி 15.8, பேச்சிப்பாறை 15, திருவட்டார் 14, சிற்றாறு2 12.4,

ஆரல்வாய்மொழி 10.4, இரணியல் 9.4, கன்னிமார் 9.3, மாம்பழத்துறையாறு 8 மி.மீட்டர் என பதிவாகி இருந்தது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

இதன் காரணமாக பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 236 கனஅடி தண்ணீர் வருகிறது. 17.10 அடியாக இருந்த அணை நீர் மட்டம் 17.30 அடியாக உயர்ந்துள்ளது. பெருஞ்சாணி அணைக்கு வினாடிக்கு 247 கன அடி தண்ணீர் வருகிறது. 31 அடியாக இருந்த பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 31.75 அடியாக உயர்ந்தது.

## பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.10¾ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை

அம்மாபேட்டை,

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.10¾ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

<u>தேங்காய்...</u>

அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. விவசாயிகள் 10 ஆயிரத்து 947 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டுவந்து இருந்தனர். இதில் சிறிய தேங்காய் 2 ரூபாய்க்கும், பெரிய தேங்காய் 7 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 43 ஆயிரத்து 115 ரூபாய்க்கு தேங்காய் விற்பனையானது.

கொப்பரை தேங்காய் 93 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 4 ஆயிரத்து 56 ரூபாய்க் கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 486 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 453 ரூபாய்க்கு விற்பனையானது.

<u>எள்</u>

எள் 19 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 9 ஆயிரத்து 409 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 9 ஆயிரத்து 709 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 207 ரூபாய்க்கு விற்பனையானது.

மக்காச்சோளம்

மக்காச்சோளம் 33 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.1,464–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,584–க்கும் ஏலம் போனது. மொத்தம் 53 ஆயிரத்து 292 ரூபாய்க்கு மக்காச்சோளம் விற்பனையானது. நிலக்கடலை காயந்தது 501 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 4 ஆயிரத்து 560 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 5 ஆயிரத்து 420 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 7 லட்சத்து 38 ஆயிரத்து 615 ரூபாய்க்கு விற்றது. விவசாய விளைபொருட்கள் மொத்தம் ரூ.10 லட்சத்து 85 ஆயிரத்துக்கு விற்பனையானது.

## கோவையில் 'கிடுகிடு' விலை உயர்வு: கறிக்கோழி இறைச்சி கிலோ ரூ.200–க்கு விற்பனை விற்பனை குறைந்து வருவதால் வியாபாரிகள் கவலை

கோவை,

கோவையில் கறிக்கோழி இறைச்சி விலை கிடுகிடுவென உயர்ந்து, கிலோ ரூ.200க்கு விற்பனையாகி வருகிறது. விற்பனை குறைந்து வருவதால் வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

கறிக்கோழி உற்பத்தி

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் 1000க்கும் மேற்பட்ட கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இதேபோல் கோவை மாவட்டத்தின் புறநகர் பகுதிகளில் உள்ள பண்ணைகளில் கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த இடங்களில் உற்பத்தி செய்யப்படும் கறிக்கோழிகள் கோவை, திருப்பூர் மாவட்டங்கள் மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு கொண்டுவரப்பட்டு, கோழி இறைச்சி

கடைகள் மூலமாக பொதுமக்கள், சிறு ஓட்டல்கள் முதல் பெரிய ஓட்டல்கள் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

<u>கிடுகிடு விலை உயர்வு</u>

இந்தநிலையில் தற்போது கோவையில் கடந்த சில வாரங்களாக கறிக்கோழி இறைச்சி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. இதன்படி கிலோ ரூ.150, ரூ.160, ரூ.170 என உயர்ந்து தற்போது கிலோ ரூ.200க்கு விற்பனையாகி வருகிறது. பொதுமக்கள் மற்றும் ஓட்டல்களுக்கு தரம்பிரித்து விற்கப்படும் கோழி இறைச்சி லெக் பீஸ் கிலோ ரூ.270க்கும், எலும்பில்லாத இறைச்சி(போன்லெஸ்) கிலோ ரூ.300க்கும், ஸ்பெஷல் இறைச்சி கிலோ ரூ.230க்கும் விற்பனையாகிறது.

கடும் விலை உயர்வால் பொதுமக்கள் இடையே கோழி இறைச்சி வாங்குவது குறைந்துள்ளது. ஓட்டல்களுக்கு சப்ளை செய்யப்படும் கோழி இறைச்சி விற்பனையும் கணிசமாக குறைந்துள்ளது. இதனால் கறிக்கோழி இறைச்சி வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

<u>வியாபாரிகள் கவலை</u>

இதேபோல் மதுரை, திருச்சி மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் நாட்டுக்கோழிகள் கோவைக்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. நாட்டுக்கோழிகளை பொறுத்தவரை விலை உயர்வு ஏற்படவில்லை. தற்போது ஒரு கிலோ நாட்டுக்கோழி இறைச்சி ரூ.350க்கும், நாட்டுக்கோழி உயிருடன் கிலோ ரூ.270க்கும் விற்பனையாகி வருகிறது.

இது தொடர்பாக கோழி இறைச்சி வியாபாரி ஒருவர் கூறும்போது, 'பண்ணைகளில் கறிக்கோழி இறைச்சி உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. இதனால் வரத்து குறைந்து உள்ளது. கறிக்கோழி இறைச்சி விலை கடுமையாக உயர்ந்து வருவதால் விற்பனை குறைந்துள்ளது. இது வியாபாரிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறது' என்றார்.

## கோவை வர்த்தக மையத்தில் 2 லட்சத்து 95 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலம் விற்பனை மதிப்பு ரூ.3¾ கோடி

கோவை,

கோவை தேயிலை வர்த்தக மையத்தில் 2 லட்சத்து 95 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலம் போனது. இதன் விற்பனை மதிப்பு ரூ.3¾ கோடி ஆகும்.

தேயிலை வர்த்தக மையம்

கோவை மேட்டுப்பாளையம் ரோடு ஜி.என்.மில்ஸ் பகுதியில் தேயிலை வர்த்தக மையம் உள்ளது. இங்கு வாரந்தோறும் மின்னணு முறையில் தேயிலை தூள் ஏலம் (இஆக்சன்) நடைபெற்று வருகிறது. அதன்படி தேயிலை வர்த்தக மையத்தில் நடைபெற்ற 23வது தேயிலை தூள் மற்றும் தேயிலை ஏலத்தின் விவரம் வருமாறு:

இதில் 2 லட்சத்து 95 ஆயிரத்து 602 கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது. 2 லட்சத்து 45 ஆயிரத்து 721 கிலோ ஏலத்தில் எடுக்கப்பட்டது. இதன் விற்பனை மதிப்பு 83 சதவீதம். மொத்த மதிப்பு 2 கோடியே 40 லட்சத்து 73 ஆயிரத்து 286 ரூபாய் 37 காசு.

தேயிலை தூள் ஏலம்

இதே போல் இலை ரக தேயிலை 1 லட்சத்து 74 ஆயிரத்து 472 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 48 ஆயிரத்து 605 கிலோ ஏலம் போனது. இதன் விற்பனை மதிப்பு 85 சதவீதம். மொத்த மதிப்பு 1 கோடியே 36 லட்சத்து 92 ஆயிரத்து 464 ரூபாய் 7 காசு. தேயிலை தூள் மற்றும் தேயிலை ரகத்தின் மொத்த விற்பனை மதிப்பு 3 கோடியே 77 லட்சத்து 65 ஆயிரத்து 721 ரூபாய் 7 காசு.

இந்த தகவலை கோவை தேயிலை நிலைய மேலாளர் பிரபாகரன் தெரிவித்தார்.

## குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணி தீவிரம்

குன்னூர்,

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் உள்ள மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணியில் சுமார் 20க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

## 30 ஏக்கர் பரப்பளவு

குன்னூர் நகரில் முக்கிய சுற்றுலா தலமாக தோட்டக் கலைத்துறைக்கு சொந்தமான சிம்ஸ் பூங்கா உள்ளது. சிம்ஸ் பூங்கா சுமார் 30 ஏக்கர் நிலப் பரப்பில் பரந்து விரிந்து உள்ளது. கோடை சீசனின் போது சிம்ஸ் பூங்கா விற்கு அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள். சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற்காக கோடை விழாவின் கடைசி நிகழ்ச்சி யாக பழக்கண்காட்சி இந்த பூங்காவில் நடக்கிறது. சுற்றுலா பயணிகளை கவர்வதற்காகவும், கோடை சீசனுக்காகவும் ஆண்டு தோறும் மலர் நாற்றுக்கள் பூங்காவில் நடவு செய்யப்பட்டு வருகிறது.

## நாற்றுக்கள்

பூங்காவில் உள்ள மலர்செடி களில் இருந்து பெறப்படும் விதைகள் பூங்காவில் உள்ள நர்சரியில் நடவு செய்யப்பட்டு மலர் செடி நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இது மட்டுமின்றி இறக்குமதி செய்யப்பட்ட அலங்கார மலர் செடி விதைகள் மூலமாக வும் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

முதல் சீசனான ஏப்ரல், மே மாதங்களில் மலர்கள் மலர் வதற்காக ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் நாற்றுக்கள் நடவு செய்யப்படுகிறது. 2வது சீசனான செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங் களிலும் மலர்கள் மலர் வதற்காக நாற்றுக்கள் நடவு செய்யப்படுகின்றன.

## 20 ஊழியர்கள்

இந்த ஆண்டு சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற் காக ஒரு லட்சம் மலர் நாற்றுக்கள் நடவு செய்யப் பட்டன. தற்போது சீசன் முடிந்து விட்டதால் சுற்றுலா பயணிகள் கூட்டம் இன்றி பூங்கா உள்ளது. மேலும் மலர்கள் காய்ந்தும் உள் ளன.

இந்த காய்ந்த மலர்களில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. காய்ந்த மலர்களில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணியில் சுமார் 20 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். இவ்வாறு சேகரிக்கப்பட்ட விதைகளில் இருந்து மலர் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப் படும் என்று அதிகாரிகள் கூறினர்.